# கௌரவத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. பாராட்டுரை

[இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்கு கௌரவத் தலைவரான தந்தை பெரியார் ஈ.வெ.ரா.விற்கு பாராட்டுரைகள்]

தமிழர்களின் தன்மான உணர்வைத் தூண்டிய பெரியார் ஈ.வெ.ரா.!
தமிழர்களின் மொழிப்பற்று உணர்வை எழுச்சி பெறச் செய்த பெரியார் ஈ.வெ.ரா.!
தமிழர்களின் இன ஒற்றுமை உணர்வை செழுச்சி பெறச் செய்த பெரியார் ஈ.வெ.ரா.!
தமிழர்களின் நாட்டுரிமை உணர்வை மறுமலர்ச்சி பெறச் செய்த பெரியார் ஈ.வெ.ரா.!
தமிழர்களின் மதச்சிந்தனையைப் புத்துணர்வு பெறச் செய்த பெரியார் ஈ.வெ.ரா.!
தமிழர்களைப் பண்பாட்டுப் புரட்சிக்குத் தயார் செய்த பெரியார் ஈ.வெ.ரா.!
தமிழ் மொழியை அருட்சினை மொழியாக்கிய பெரியார் ஈ.வெ.ரா.!
தமிழர்களிடையே இருந்த கூலி, போலி அரசியல் உணர்வுகளை ஒழித்த பெரியார் ஈ.வெ.ரா.!
உலகத் தமிழர்களை ஒன்று திரட்டும் மாபெரும் புரட்சியைத் துவக்கிய பெரியார் ஈ.வெ.ரா.!
தமிழின உரிமைக்கும் பெருமைக்கும் போராடிய பெரியார் ஈ.வெ.ரா.!
கடைசித் தமிழன் உள்ளவரை தனக்கு நன்றி செலுத்தும்படித் தொண்டாற்றிய பெரியார் ஈ.வெ.ரா.!

இவ்வாறு தமிழ்மொழி, இனம், நாடு இவற்றுக்குத் தொண்டாற்றிய பகுத்தறிவுப் பகலவன், சிந்தனைச் சிற்பி, தன்னலமில்லாது தொண்டாற்றிய மாவீரர், சிறைக்கஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தர், அறிவுலக மாமேதை, தமிழினத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வின் கனவுகள் நனவாக்கப் பகுத்தறிவு வழி மதப் புரட்சியும், மதவழிச் சமுதாயப் புரட்சியும் உருவாக்கும் பேராற்றலும், நெடிய, பெரிய, இடையீடற்ற பாரம்பரியமும் உடைய இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை அனைவரும் உணர்ந்து, ஒன்று திரண்டு ஒற்றுமைப்பட்டால்தான் ஒருமைப்பாட்டின் கரு வளர்ந்து முழுமை பெற்று நற்பிறப்பு ஏற்பட்டிடும். இ.ம.இ. கருஞ்சட்டையிலும், அ.வி.தி. செஞ்சட்டையிலும் செயல்படட்டும்.

-- தலைவர், இந்து மறுமலர்ச்சி இயக்கம்

---

பெரியார் ஈ.வெ.ரா.வின் தத்துவம், சித்தாந்தம், கொள்கை, குறிக்கோள் முதலியவைகளையும் அடிப்படையாகக் கொண்ட இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் முழக்கங்கள்.

தமிழர்களைத் தமிழர்களென்று உணரச் செய்த பெரியாரின் தத்துவம் வளரட்டும்!
தமிழர்களுக்கு மொழிவழி இன உணர்வூட்டிய பெரியாரின் தத்துவம் வளரட்டும்!
தமிழர்களுக்கு மொழிப்பற்றையும், பாசத்தையும் தந்த பெரியாரின் தத்துவம் வளரட்டும்!
தமிழர்கள் மொழியுரிமைப் போருக்குத் தயாரித்த பெரியாரின் தத்துவம் வளரட்டும்!
தமிழர்களை மொழிவள வளர்ச்சிப் பணியில் ஈடுபடுத்திய பெரியாரின் தத்துவம் வளரட்டும்!
தமிழர்களை இனஒற்றுமை முயற்சியில் ஈடுபடுத்திய பெரியாரின் தத்துவம் வளரட்டும்!
தமிழர்களைச் சாதி, மத, மொழி வேறுபாடு கடந்து ஒருமைப்பாடு பெறச்செய்த பெரியாரின் தத்துவம் வளரட்டும்!
........

# சுவாமி விவேகானந்தரைப் பற்றிய ஓர் ஆய்வு

<u>சான்று:</u> The Indian Mirror - 24-6-1899

விவேகானந்தரைப் பேட்டி கண்டவர் 'பிரபுத்த பாரத' என்ற பத்திரிகையின் நிருபர்

<u>ஊன்று</u>: 'இந்துமதம் அழைக்கிறது' - மார்ச், 1984 பக்கம்: 63,64

<u>நிருபர்</u>: ஹிந்து தர்மத்திலிருந்து திசை தவறிப்போனவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளலாமா? வருகிறவர்களுக்குச் சாதி .....?

<u>விவேகானந்தர்:</u> தானாகவே அவர்களது சாதி அமையும். புதிதாக வருகிறவர்கள் புதிய சாதி அமைத்துக் கொள்வார்கள்.

<u>நிருபர்:</u> புதியவர்களின் மண உறவு எப்படி அமையும்?

<u>விவேகானந்தர்:</u> இப்போது எப்படி நடக்கிறதோ, அதேபோல்தான் அவர்கள் தங்களுக்குள் பெண் கொடுத்து எடுத்துக் கொள்வார்கள்.

<u>ஆய்வு:</u> இந்து மதத்துக்குள் புதிய தெம்பும், தெளிவும், பொலிவும் ஊட்டிடும் பெரியவர்கள் காலங்கள் தோறும் தோன்றிடுகின்றார்கள். அவர்களுள் ஒருவரே விவேகானந்தர். ஆனால், அவரே ஆரியர்களின் 'வர்ணாசிரமத் தர்மம், சனாதன தர்மம்...' என்பனவற்றை ஏற்று இந்து மதத்தில் சாதிப் பிரிவுகள் வளரவும், வலிமைப்படவும், வளமாக என்றென்றும் இருக்கவும் ஏற்பாடுகளைச் செய்துவிட்டுச் சென்றிருக்கிறார் என்ற பேருண்மையைத்தான் அவர் நிருபருக்கு அளித்த பதில்கள் விளக்குகின்றன.

<u>குறிப்பு:-</u>
(க) சாதிகளே இல்லாத 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைப்பதையே கொள்கையாகவும், குறிக்கோளாகவும் கொண்டு மனித சமுதாயத்திற்கு இந்து மதத்தை வழங்கினார்கள் பதினெண் சித்தர்கள். அதனை ஆரியர்கள் மறைத்தும் குறைத்தும், மாற்றியும், திரித்தும் சாதியை வளர்த்ததால்தான் இந்துமதம் பாழ்பட்டது. எனவே, சாதிகளை ஒழித்தால்தான் இந்துமதம் மலரும், வளரும், வளப்படும், வலிமைப்படும் என்று கருத்துக் கூற விவேகானந்தருக்குத் தெரியவில்லையா? தெம்பில்லையா? துணிவில்லையா?
(உ) "... இந்துமதம் மறுமலர்ச்சியடைய வேண்டுமென்றால் சாதிவேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும், சண்டைகளும் தடுக்கப் பட்டே அகற்றப் படவேண்டும். அதற்கு ஒரே ஒரு வழி கலப்புத் திருமணம்தான்...." என்று அனைத்து இந்துமதச் சீர்திருத்தங்கள் தொன்று தொட்டு கூறிவருவது விவேகானந்தருக்குத் தெரியவில்லையா? புரியவில்லையா? அவரே அந்தந்தச் சாதிக்குள்தான் திருமணம் நடக்க வேண்டும் என்று கூறியிருப்பது இந்துமத வீழ்ச்சிக்கா? விழிச்சிக்கா?

--- இந்துமதத் தந்தை
குருமகா சன்னிதானம்
ஞாலகுருசித்தர் கருவூரார்
22-3-84

# பால்குடப் பெருவிழா நிறைவு மலர்
# இயக்க வளர்ச்சி நிலை - குருதேவரின் விளக்கம்

17-6-84 ஞாயிறன்று முதலாம் இ.ம.இ. நிறைவாண்டையொட்டி நடைபெற்ற விழாவில் இ.ம.இ. தலைவர் ஞாலகுரு சித்தர் கருவூரார் வழங்கிய வளர்ச்சி நிலை விளக்கம்.

1. உலகம் முழுவதும் பதினெண் சித்தர்களால் அருள் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப் பட்டு 48 வகையான வழிபாட்டு நிலையங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், அந்தந்த வட்டார இயற்கைச் சூழலுக்கும், தேவைக்கும் ஏற்ப வழிபாட்டு நெறி முறைகள் வகுக்கப்பட்டன. பதினெண் சித்தர்கள் தங்களது தாய் மொழியான தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டே உலகெங்கும் பல்வேறு மொழிகளைத் தோற்றுவித்து அவரவர் தாய்மொழியிலேயே வழிபாடுகள் நிகழ்த்திட ஏற்பாடுகள் செய்தனர்.

பூசை மொழி வாசகங்களும் (எழுதப்பட்டவை), வாக்குகளும் (எழுதாக் கிளவிகள்) ஓதப்படும் போது தமிழ் மொழியின் அடிப்படை ஒலிகளாகவே இருப்பதை என்றென்றும் எவரும் உணரும் வண்ணமே உலக மொழிகளும், வழிபாட்டு நெறிமுறைகளும் படைக்கப் பட்டுள்ளன. எனவே, மொழிச் சர்வாதிகாரமோ, ஆதிக்கமோ, அடிமை நிலையோ உருவாகாமல் என்றென்றும் மதத் தனிமைகள், விடுதலைகள், தன்னுரிமைகள் போற்றிப் பேணப்பட வழிவகைகளைச் செய்துள்ளனர் பதினெண் சித்தர்கள்.

2. பணக்காரர்கள், வசதிமிக்க வாழ்வு, வளமான உணவு, அடிக்கடி கோயில் வழிபாடு, தேவைக்கேற்ப மந்திரவாதி பூசாறி, மருளாளி உதவி பெறல்,.... என்பனவற்றால் பேய், பிசாசு, காற்று, கருப்பு, கோள், மீன், இராசி... முதலியவைகளின் பாதிப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். ஆனால், ஏழை, எளிய, பாட்டாளிப் பாமர மக்கள் நாத்திகத்தால், கடவுள் மறுப்பால், சோம்பேறித்தனத்தால், வளமற்ற உணவால்,.... மேற்படிப் பாதிப்புகளால் மெலிந்தும், நலிந்தும், கேடுற்றும் துன்புறுகின்றனர். இவற்றால், பாட்டாளி வர்க்கத்தையும், மத்தியதர வர்க்கத்தையும் காப்பாற்றும் பொருட்டே ஒவ்வொரு ஊரின் பல பகுதிகளிலும் அ.வி.தி. நிலையங்களை அமைத்து அருளை மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கிடும் பணியினைப் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி உருவாக்கியுள்ளார். இப்பணி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வளர்ச்சி நிலையை விளக்குவதாகவே உள்ளது.

3. இம் மண்ணுலகில் ஒரு நாடு மற்றொரு நாட்டையோ ஒரு மாநிலம் மற்றொரு மாநிலத்தையோ! ஓர் இனம் மற்றோர் இனத்தையோ! ஒரு மொழி மற்றொரு மொழியையோ!.... அடக்கி யாளுவதும், அதிகாரம் செய்வதும், சுரண்டுவதும், அடிமைப்படுத்துவதும் தவறு! தவறு! தவறு!.... " என்று பதினெண் சித்தர்கள் விளக்கியுள்ளனர்.
இக் கருத்துப்படியே, 'தனியுரிமை', 'தன்னுரிமை', 'தன்னாட்சி', 'தன்மான வளர்ச்சி' .... முதலிய பண்பு நலன்கள் உலகெங்கும் பேணப்படுதற்காக உழைக்கவே இந்து மறுமலர்ச்சி இயக்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மேற்கூறிய பண்புநலன்கள் இந்தியத் துணைக்கண்டத்திலும், தமிழகத்திலும் பேணி வளர்க்கப்பட முயலவேண்டிய கடமை. இ.ம.இக்கும் உண்டு. இதனை, அனைவரும் தெரிய, அறிய, புரியச் செய்வதில்தான் இன்றைய பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் வாழ்நாள் செலவாகிறது.

4. முதலில் தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றும் இன ஒற்றுமையுணர்வும் தழைத்தோங்கச் செய்ய வேண்டும். தமிழினத் துரோகிகளே இல்லாத நிலையை

உருவாக்கிய பிறகுதான் விரோதிகளைப் பற்றிய சிந்தனையும், செயலும் பிறக்க வேண்டும். இதற்குப் பண்பாட்டுப் புரட்சியும், மொழியுணர்ச்சியின் விழிச்சியும் மத உணர்ச்சியின் எழுச்சியும், இன உணர்ச்சியில் செழுச்சியும் ஏற்பட வேண்டும். அதற்கேற்ற பணிகளைச் சிந்தித்துத் திட்டமிட்டுச் செயலாக்கலே இ.ம.இ. வளர்ச்சி நிலை விளக்கம்.

*(இதேபோல், மொத்தம் பத்துக் கருத்துக்கள் உள்ளன. முழுமையும் வேண்டும் என்போர் அஞ்சல் தொடர்பு கொண்டால் உடனே அனுப்பப் படும்)*

---

## ஞாலகுருவின் திருவோலக்கத் தீர்மானங்கள்

இரத்தாட்சி ஆண்டு வைகாசித் திங்கள் 30-ம் தேதி (12-6-84) அருள்மிகு வீரமாகாளி சன்னிதானத்தில் நடைபெற்ற ஞானம் வழங்கும் பருவப் பூசை மற்றும், 'பால்குடப் பெருவிழா'வில் இன்றைய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் வழங்கிய குருவாணைகள் பன்னிரண்டு நிருவன, நிருவாக ஒழுங்கமைப்புகளுக்குரிய சட்ட திட்டங்கள். இவற்றினை முழுமையாக ஏற்று அதன்படியே செயல் படாதவர்கள் குருவை விட்டு விலகியவர்களாக, சித்தர் நெறிக்குத் துரோகம் செய்தவர்களாகக் கருதப் படுவார்கள். இவர்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளுக்கும், பாதிப்புகளுக்கும் குருதேவரோ, இயக்கமோ, சித்தர்நெறியோ, ஏனையரோ பொறுப்பல்ல! பொறுப்பல்ல!! பொறுப்பல்ல!!!

1. பிறருக்கு அருள் வழங்க வேண்டுமென்று நினைக்கின்றவர்கள் சித்தர் நெறிப்படி பிடரி வரை முடியும், காதளவு பக்க முடியும், பெரிய மீசையும் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும். இவையில்லாமல் அருள் வழங்கும் பணியில் ஈடுபட்டு எந்த நிலை பாதிப்புகளை அடைந்தாலும் அதற்கு குருதேவரோ, அவரைச் சார்ந்தவர்களோ, அவரது அமைப்புக்களோ பொறுப்பல்ல!

<u>குறிப்பு:</u> மொட்டை அடித்துக் கொண்டவர்கள், முடிதாடி வளராத இளமை வயதினர் விதிவிலக்காகிறார்கள்.

2. அருட்பட்டம் பெற்ற அனைவரும் உலகெங்கும் உள்ளவர்கள் ஆண்டுக்கொரு முறையாவது அ.வி.தி. தலைமைச் செயலகமான காரியேந்தல்பட்டியில் நிகழும் வைகாசி ஞானம் வழங்கும் பருவப் பூசை மற்றும் பால்குடப் பெருவிழாவில் கலந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் தங்கள் அருட்பட்டத்துக்குரிய எல்லா நிலைகளையும் இழக்கிறார்கள். மீண்டும் ஒருமுறை அவர்கள் குருதேவரிடம் எல்லா அருட்கணிப்புகளையும் பெற்றுத்தான் இயக்கத்தில் செயல்பட வேண்டும்.

3. அந்தந்தக் மாவட்டத்திற்கு அ.வி.தி.யும், தலைமைச் செயலகமும் எதுவென்று அறிவிக்கப்படுகின்றதோ அதற்கு மாதந்தோறும் நடைபெறும் பருவப் பூசைக்கு அருட்பட்டம் பெற்றவர்கள் அனைவரும் கூடி குருதேவரிடமிருந்து அருளைப் பெற வேண்டும். (நிலவின் மூலம், யாகத்தின் மூலம்) இப்படிப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அடுத்த ஒரு மாதத்திற்கு யாருக்கும் அருள் வழங்கக் கூடாது. அவர்கள் வீட்டிலேயே பூசையைச் செய்து கொள்ளலாம். தொடர்ந்து இரண்டு பருவப் பூசைகளுக்கு வராதவர்கள் தங்களின் எல்லா அருட்பட்டங்களையும் இழப்பார்கள். மீண்டும் குருதேவரிடம் ஒப்புதல் பெற்று புதியதாகத்தான் அருட்பட்டம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மாவட்டந் தோறும் தலைமைச் செயலகம், தலைமை அலுவலகம், தலைமைப்

பொறுப்பகம் என்ற மூன்று அமைப்புகள் இருந்திடும். அலுவலகத்தில் இ.ம.இ. கொடிகள், அ.வி.தி. கொடிகள், கொள்கை விளக்க அறிவிப்புகள், அ.வி.தி. உறுப்பினர்ப் பட்டியல்,... முதலியன இருக்கும். அலுவலகத்தில் யோகாசன, ஓகாசனப் பயிற்சிகள், சித்தர் நெறி அருட்கலைகள், உடலோம்பல் பயிற்சிகள், உயிரோம்பல் பயிற்சிகள், ... குருதேவரிடம் பயிற்சி பெற்றவர்களால் வசதி வாய்ப்புப்படி வாரத்தில் ஒரு சில நாட்கள் வழங்கப்படும்.

5. அருள் வழங்கு நிலையங்களில் அருள்வாக்கு கூறுகின்றவர்கள், மந்திரித்து நலம் விளைவிப்பதற்குப் பொறுப்பானவர்கள் அல்ல. மந்திரித்து அருள் வழங்குபவர்கள் பதினோரு வாரங்களில் நலம் விளையாவிட்டால் மாவட்டத் தலைமைச் செயலகத்தோடும், அ.வி.தி. தலைமைச் செயலகம் காரியேந்தல்பட்டியுடனும் தொடர்பு கொள்ள வேண்டும். அ.வி.தி. தலைமைச் செயலாளரே குருதேவருடன் கலந்து மேற்கொண்டு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்வார்.

6 அருள் வழங்குபவர்கள் அதாவது மந்திரிப்பவர்கள் அன்றாடம் 108 (நூற்றெட்டு) முறை காயந்திரி மந்தரம் சொல்லியே ஆக வேண்டும். அன்றாடம் பகலிலோ அல்லது இரவிலோ குறைந்தது $1^1/_4$ மணிநேரமாவது கலசப் பூசை செய்தேயாக வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் (தீட்டு, விலக்கு) செய்யாமல் இருக்கக் கூடாது. செய்யாமல் இருப்பவர்கள் மந்திரிக்கக் கூடாது.

<u>குறிப்பு:</u> ஒருநாள் பூசை தவறினாலும் ஒருவாரத்திற்கு மந்திரிக்கக் கூடாது. மீறி மந்திரிப்பவர்கள் எல்லா வகையான உடல் பாதிப்புகளையும், மற்ற பாதிப்புகளையும் அடைவார்கள். அதற்கு குருதேவரோ, மற்றவர்களோ பொறுப்பல்ல!

---- *(தீர்மானங்கள் பன்னிரண்டும் வேண்டும் என்போருக்கு அஞ்சலில் அனுப்பப்படும்)*

---

## “மதப் பொதுமை, மதச் சமத்துவம்”

"... சுதந்திர பாரத அரசில் வாக்குறுதியளித்த இராம ராஜ்யத்தைக் காண முடியவில்லை. ஹிந்துக்களைப் பொறுத்தவரையில் சுதந்திரம் இன்னும் முழுமை பெறவில்லை"

"....ஹிந்து அல்லாதார் நமது பள்ளிகளை எப்படி வேண்டுமானாலும் நடத்தி வரலாம்; யாரை வேண்டுமானாலும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம், பிற மதத்தவர்கள் நடத்துகின்ற பள்ளிகளுக்கு முன்பணம் (Deposits) கட்டும் விஷயத்திலும் சலுகைகள் உண்டு. சிறுபான்மையினர் ஸ்தாபனம் என்ற முறையில் அவர்கள் எவ்வளவு பணம் வசூலித்தாலும் கேள்வி முறையில்லை. பிறமதத்தினர் நடத்தும் பள்ளிகளில் அவர்கள் தாராளமாக மதப் பிரச்சாரம் செய்யலாம். ஆனால், ஹிந்துப் பள்ளிகளில் மதபோதனை சரிவர நடப்பதில்லை......

"... ஹிந்து எழுச்சி மாநாடுகள், ஊர்வலங்கள், ஆலயத் திருவிழாக்களில் தொடர் சொற்பொழிவுகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து ஹிந்து சமய, சமூக ஞானத்தையும், ஒற்றுமையையும் வளர்க்க வேண்டும்...."

---- இக்கருத்துக்கள் பரவலாகப் பேசப்படுவதால் சிலர் இந்துமத விழிச்சியுணர்வையும், செழுச்சியுணர்வையும் வியாபாரமாக்கிப் பணம் சம்பாதிக்கிறார்கள். இந்து துரோகிகளையும், விரோதிகளையும் வென்றால்தான் இந்துமதத் தத்துவம், வரலாறு, வாழ்வு,.... வடிவமும், வளவளர்ச்சியும் பெறும்.

---

# அன்புள்ள சேவுக !!

அன்புள்ள சேவுக!

நான் தனியனுகக் காடு, மேடு, ஆறு, கடல் என்று இயற்கை கொப்பளிக்கும் இடங்களிலெல்லாம் திரிந்தபோது கூட அஞ்சவோ கலங்கவோ இல்லை; பசி வேட்கையுடன் திரிந்த மிருகங்களின் முன்ஞல் சென்ற போதும்; சீற்றமெடுத்துப் பாய்ந்துவரும் ஆற்று வெள்ளத்தில் நீந்திய போதும்; ஆர்ப்பரித்துப் பொங்கியெழுந்து நின்ற கடற் சூருவளியில் பயணம் செய்த போதும்; ஆரவாரித்து ஓ'வென்று சுழன்று சுழன்று அடித்த புயற்காற்றில் சிக்கிய போதும் நான் மயங்கவோ, மதிமாருவோ இல்லை. இவைகளையெல்லாம் தாண்டி, மனிதர்களுக்காக, மானுட நலனுக்காக நான் பெற்ற அநுபவங்களையும், உற்ற ஏட்டறிவுகளையும், பட்டறிவுகளையும் சுமந்து வந்தபோதுதான் தயங்கினேன், தடுமாறினேன், சிந்தித்தேன். சமுதாயம் மூடநம்பிக்கையாலும், மடமைப் போக்காலும், வீணுன வறட்டுவாதத் தத்துவத்தாலும் புரையோடிக் கிடப்பதைக் கண்டுத் துணுக்குற்றேன்! ஆழ்ந்து ஆராய்ந்தேன்!

எனது தந்தை, பகுத்தறிவு மேதை, மாபெரும் சீர்திருத்தவாதி, பொதுவுடமைச் சிந்தனைவாதியான காக்காவழியன் பண்ணையாடி M. பழனிச்சாமிப் பிள்ளையவர்கள் சமுதாயத்தைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் என் நெஞ்சில் ஆழத் தைத்தன. அப்போதுதான் எனது தந்தை என்னிடம் விட்டுச் சென்றிருக்கின்ற மாபெரும் பொறுப்பை உணர்ந்தேன். தமிழ் மொழிக்காக, நாட்டுக்காக, இனத்துக்காக, தமிழக இந்திய உலக வரலாற்றுக்காக, உலகச் சமயங்களுக்காக, உலக அறிஞர்களுக்காக, அறிஞர்களின் சாதனைகளின் உண்மையான பலனை அடைவதற்காக, மருத்துவத்திற்காக, கலைக்காக, விஞ்ஞானத்திற்காக, தொழிலுக்காக, பொதுவுடமைத் தத்துவத்திற்காக,... என் மூலம் செய்ய வேண்டிய பணிகளை உணர்ந்தேன். நான் எதையும் என் சொந்தக் கருத்தாகவே தருவதில்லை. ஏட்டிலே இருப்பதை மீண்டும் மக்கள் மத்தியில் உம்மைப் போன்றவர்கள் மூலம் அள்ளித் தருகின்றேன், செயல்படுத்திப் பார்க்குமாறு அழைக்கின்றேன். உலக அமைப்பாளர்கள் அத்தனை பேரையும் உரத்தக் குரலில் அழைத்து உண்மைகளை எடுத்துரைக்கின்றேன்.

காலம் விடியுமென்று கதிரவனுக்காகக் காத்திருக்கவில்லை. ஏழிசைப் பாடுமென்று புல்லினங்கள் வரவுக்காக ஏங்கியிருக்கவில்லை. 'எனது கடன் பணி செய்து கிடப்பதே' என்று வறண்ட, முட்புதர்க் காடுகளை சரமாரியாக வெட்டி வீழ்த்தித் தந்துவிட்டுச் சென்ற பகுத்தறிவுப் பகலவன், சிறக்கஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் பாதையில் உம்மைப் போன்ரோரின் துணையோடு நடக்கின்றேன். ஆஞல், இப்போதுதான் ஏச்சுக்களையும், பேச்சுக்களையும், ஏமாற்றங்களையும், தோல்விகளையும் சந்திக்க நேருமா? என்றஞ்சியே தாத்தாக்களின் ஆத்தாக்களின் துணையோடு எமது வாழ்க்கையையே தெய்வீகச் சோதனையாக்கிச் செல்லுகின்றேன். எம்முடன் நீயும் அணி வகுப்பாய்! உம்முடன் இந்த அவனியே அணி வகுக்கும் என்பதில் ஐயமில்லை!

அன்பு
ஞாலகுரு சித்தர் கருவூரார்

---

# கேள்வியும் நானே! பதிலும் நானே!!

## 1. யோகாசனம் பற்றி சித்தர்களின் கருத்தென்ன!

பழம் பிறப்புகள், இப்பிறப்பு, மறுபிறப்புக்களைத் தெரிந்து கொள்ள உதவுவது ஆசனம்.
ஆசு = குற்றம் = பிறப்பு
ஆசு + இனம் = பிறப்பின் வகைகளைத் தெரிந்து கொள்ளுதல்

பின் வந்த 48 வகைச் சித்தர்களின் கருத்து:
ஆது = (ஆசுவாகப் பின்னர் மாறியது) = உயிர், கடவுள், ...!
ஆ + து = ஆது = ஆவி, ஆன்மா, உயிர் மூன்றையும் துடைப்பது, தூய்மைப்படுத்துவது.
இனம் = இப்பணி பற்றிய அல்லது இக்கலை பற்றிய விளக்க வகைகள், விளக்க இனங்கள்.
ஆது + இனம் = ஆதனம் = ஆசனம் = மனிதரைத் தூய்மைப்படுத்தும் கலைகள்
யோகாசனம் = யோகம் + ஆசனம்; இதனை அனைவரும் கற்கலாம்.
ஓகாசனம் = ஓகம் + ஆசனம்; குருவால் நேரடியாகக் கற்றுத் தரப்படும் காலப் போக்கில் ஓகாசனம் மறைந்து விட்டது. மீண்டும் இ.ம.இ.யின் குருகுலங்களில் கற்றுத் தரப்படுகின்றன.

## 2. பட்டாளம் என்பது தமிழ்ச் சொல்லா?

பட்டாளம் என்பது தமிழ்ச் சொல்லே!
பட்டு + ஆள் + அம் = பட்டாளம்
பட்டு = துஞ்சுதல் = தற்கொலை
போரில் தன்னை முன்னிறுத்தி மாய்த்துக் கொள்கின்ற ஆட்கள் கொண்ட அமைப்பு. பிற்காலச் சோழப் பேரரசில் தாத்தா கருவூரர் பட்டாளத்தை உருவாக்கினர் என்பது குருபாரம்பரிய ஏடுகளில் காணப்படுகின்றது. பட்டாளம் என்ற தற்கொலைப் படையையே இராசராச சோழன் உருவாக்கிச் செயல்பட்டான் என்றும் உள்ளது.

## 3. 'அருட்சினை' என்று பதினெண் சித்தர்கள் முறையில் எழுத வேண்டும் என்று கூறப்படுவதேன்?

அர்ச்சனை என்று சமசுக்கிருதத்தில் கூறப்படுகின்றது. குளிர்ப் பிரதேசத்திலிருந்து ஆரியர்கள் வந்ததாலும், இன்றுவரை நாக்கு அவர்களுக்கு செம்மையடையாததாலும் 'அருட்சினை' என்னும் மென்மையான, இனிமையான, சொல்லும்போதே பொருள் தரக்கூடிய தமிழ்ச் சொல்லை அவ்வாறு குறிக்கின்றனர். தமிழர்களும் அவர்களின் வாழ்க்கை நடைமுறையைப் பின்பற்றுவதுதான் நாகரீகம், மதிப்பு, கௌரவம் என்று நினைப்பதால், இந்தத் தவறு தமிழ்ச் சமுதாயத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.
அருட்சினை = அருள் + சினை
"அருளைப் பெறுவதற்கு, இறையணுக்களைப் பெறுவதற்கு சினையாக, கருவாக இருப்பது" என்று பொருள். கருவாக இருப்பது மந்திரச் சொற்கள், கருவாக இருப்பவர் 'அருட்சினையாளர்' என்றும் தெளிவாகக் குறிக்கப் படுகின்றது.

இதேபோல்தான், 'பிறச்சினை'யும். பிரச்னை என்பது தவறு. (பிறப்பு + சினை)